'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின்கீழ்

2 கோடியாவது பயனாளி வீட்டுக்கு நேரில் சென்று மருந்துப் பெட்டகத்தை வழங்கிய முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, டிச.20– மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 2 கோடிக்கும் மேற்பட்டோர் பயன் அடைந்துள்ளனர். ஈரோட்டில், 2 கோடியாவது பயனாளியின் வீட்டுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று மருந்து பெட்டகத்தை வழங்கினார்.

'கள ஆய்வில் முதல்அமைச்சர்' என்ற திட்டத்தின் கீழ் ஆய்வு செய்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று ஈரோடு மாவட்டம் சென்றார். அங்கு அவர், மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் 2 கோடியாவது பயனாளியான நஞ்சனாபுரத்தை சேர்ந்த சுந்தராம்பாள் என்பவரின் வீட்டுக்கு நேரில் சென்று அவருக்கு மருந்து பெட்டகத்தை வழங்கினார்.அவருக்கு அளிக்கப்பட்ட இயன்முறை சிகிச்சை முறைகளை பார்வையிட்டு சிகிச்சை விவரங்களை கேட்டறிந்தார்.

மேலும் அவர், 2 கோடியே ஒன்றாவது பயனாளியான வசந்தாவின் இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு வழங்கப்படும் இயன்முறை சிகிச்சை முறைகளை பார்வையிட்டு, சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது அமைச்சர்கள் முத்துசாமி, மா.சுப்பிரமணியன், தி.மு.க. எம்.பி. அந்தியூர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, இணை இயக்குநர் (மருத்துவம்) கவிதா, துணை இயக்குநர் அருணா ஆகியோர் உடனிருந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் முதல் பயனாளியான சரோஜாம்மாளுக்கு மருந்து பெட்டகத்தை வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த திட்டத்தை கடந்த 5.8.2021 அன்று தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின், ஒரு கோடியே ஒன்றாவது பயனாளியான திருச்சி மாவட்டம், சன்னாசிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் மீனாட்சிக்கு 29.12.2022 அன்று முதலமைச்சர் மருந்து பெட்டகம் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரையில், ஈரோடு மாவட்டத்தில் ரூ.121 கோடியே 56 லட்சம் செலவிலான மருத்துவக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டு, மக்கள் பயன்பெற்று வருகின்றனர் என்று தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 2 கோடியாவது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை வழங்கியதை எண்ணி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் அடைந்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைத்தளப்பதிவில் கூறியிருப்பதாவது:–

நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதில் புதுப் புரட்சி, ஐ.நா. அமைப்பின் விருது எனச் சாதனைச் சரிதம் எழுதிவரும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் 2 கோடியாவது பயனாளிக்கு மருந்துப்பெட்டகங்களை வழங்கினேன்

மருத்துவமனைகளை நாடிச்செல்ல வோ, வீட்டுக்கு மருத்துவர்களை வரவழைக்கவோ வசதியில்லாத எண்ணற்றோருக்கு வீடு தேடிச் சென்று 'பிசியோதெரபி' அளித்து வாழ்வில் ஒளியேற்றும் சாதனையையும் சத்தமின்றிப் படைத்து வரும் இத்திட்டத்தின் வெற்றிக்குக் காரணமான 14 ஆயிரம் மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் பிச்சாண்டம்பாளையத்தில்

நெசவாளர்களின் விசைத்தறி கூடத்தை பார்வையிட்டு, தேவைகளையும் கேட்டறிந்த முதலமைச்சர் ஸ்டாலின்

ஈரோடு, டிச.20– ஈரோடு விசைத்தறி கூடத்தை நேரில் பார்வையிட்டு, நெசவாளர்களின் தேவைகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் கூடிய மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 750 அலகுகள் வரை மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது அந்த விலையில்லா மின்சாரத்தின் அளவு 3.3.2023 முதல் ஆயிரம் அலகுகளாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

உற்பத்தியின்போது நூல்கள் அறுந்து விழுவதை தடுக்கவும், சாதாரண விசைத்தறிகளில் சீரான மற்றும் நிலையான தரத்துடனும் துணிகள் உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்த, 50 சதவீதம் அரசு மானியத்துடன் 5 ஆயிரம் விசைத்தறியில் மின்னணு விசைப் பலகைகள் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, ரூ.6 கோடி நிதி, அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, விசைத்தறி செறிவு மிக்க பகுதிகளில் 5 ஆயிரம் விசைத்தறிகளில் மின்னணு விசைப் பலகைகள் பொருத்தப்பட்டன. இதுபோன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோட்டுக்கு வந்தார். அங்கு விசைத்தறி தொழில் மேம்பாட்டிற்காகவும், அப்பணியில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், விசைத்தறி கூடத்திற்கு நேரில் சென்று அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறியவும் முதலமைச்சர் விரும்பினார்.

அதன்படி, அவர் ஈரோடு மாவட்டம் பிச்சாண்டம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் இயங்கி வரும் 2 விசைத்தறி கூடங்களுக்கு நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். அதன் செயல்பாடுகள் குறித்தும், நெசவாளர்களின் தேவைகள் குறித்தும் முதலமைச்சர் கேட்டறிந்தார். அந்த விசைத்தறி கூடங்களில் 24 விசைத்தறிகள் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 5 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

அமைச்சர்கள் நேரு, முத்துசாமி, அந்தியூர் செல்வராஜ் எம்.பி., மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா மற்றும் பலர் உடனிருந்தனர்.

விசா இல்லாமல் 26 நாடுகளுக்கு செல்லலாம்: மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, டிச.20– மாநிலங்களவை உறுப்பினர் ஒருவர், இந்திய பாஸ்போர்ட்டின் தரவரிசை மற்றும் விசா இல்லாத பயணம் போன்ற விவரங்களை மாநிலங்களவையில் கேள்வியாக கேட்டிருந்தார். இதற்கு வெளியுறவு விவகாரங்கள் இணை அமைச்சர் கீர்த்தி வர்தன்சிங் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கூறியிப்பதாவது:

உலகம் முழுவதும் பாஸ்போர்ட்டுகளுக்கு தரவரிசையை வழங்கும் சில தனியார் நிறுவனங்கள் உள்ளன. அவர்களால் தீர்மானிக்கப்பட்ட அளவுருக்கள் இருந்தாலும், பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவரிசை முறை எதுவும் இல்லை.

அமைச்சகத்துக்கு கிடைத்த தகவல்களின்படி, இந்திய பாஸ்போர்ட்டுக்கு 26 நாடுகள் (அங்கோலா, தாய்லாந்து, நேபாளம், பூடான், மலேசியா, மாலத்தீவு, செர்பியா, பிலிப்பைன்ஸ், ருவாண்டா உள்ளிட்டவை) விசா இல்லாத நுழைவை வழங்குகின்றன. 40 நாடுகள் "ஆன்அரைவல்" வசதியை (கிளம்பிச்செல்லும் தருவாயில் பெற்றுக்கொள்ளலாம்) வழங்குகிறது. அமைச்சகத்தின் இணையதளத்தில் இது கிடைக்கும்.நேபாளம், பூடான் மற்றும் மாலத்தீவுகளின் குடிமக்களுக்கு விதிகளுக்கு உட்பட்டு விசா இல்லாத நுழைவை இந்தியா வழங்குகிறது.இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசா இல்லாத நாடுகள், 'ஆன் அரைவல்' விசா நாடுகள் பற்றிய வெளியுறவு அமைச்சகத்தின் பட்டியலில் இ–விசாவை பயன்படுத்தி 58 நாடுகளுக்கு பயணிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இவற்றை பயணிகள் அந்தந்த நேரத்தில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் .

படிவம் B

பொது அறிவிப்பு

(நொடித்தல் மற்றும் இந்திய திவால் நிலை வாரியத்தின் (கலைப்பு நடைமுறைகள்) விதிமுறைகள் 2016ன், விதி 12- ன் கீழ்)

ஷீபா மரைன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்டின் பங்குதாரர்கள் கவனத்திற்கு

வ. எண்	விவரங்கள்	விவரங்கள்
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	**ஷீபா மரைன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்**
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	அக்டோபர் 14, 2014
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	கம்பெனிகள் பதிவாளர், சென்னை
4.	கார்ப்பரேட் கடனாளரின் நிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	U74900TN2014PTC097690
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (வேறு ஏதேனும் இருப்பின்) முகவரி	பதிவு அலுவலகம்: எண். 46 தென்ஜுர் அஞ்சல், விழுப்புரம், திண்டிவனம், தமிழ்நாடு 604001
6.	திவால் தீர்மான நடைமுறை மூடும் தேதி	டிசம்பர் 13, 2024 (கலைப்பு உத்தரவுத் தேதி)
7.	கார்ப்பரேட் கடனாளரின் கலைப்பு துவங்கும் தேதி	டிசம்பர் 13, 2024 (டிசம்பர் 17, 2024 அன்று NCLT இணையதளத்தில் உத்தரவு நகல் பதிவேற்றப்பட்டது)
8.	கலைப்பலுவலராக செயல்படும் தீர்மான நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்	**திரு. பிரகுல் தாடி** IBBI/IPA-002/IP-N01149/2021-2022/13806
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி கலைப்பலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: பிளாட் எண். 1405, ஜே பிளாக், ரெயின்போ விஸ்டாஸ், கீரின் ஹில்ஸ் ரோடு, மூசாபேட், ஹைதராபாத், தெலுங்கானா – 500018 மின்னஞ்சல் முகவரி: prakulthadi@hotmail.com
10.	தொடர்புக்கான கலைப்பலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: 470/12, IIவது மாடி, HIG-1, பிளாக்5, பாக்லிங்கம்பள்ளி, ஹைதராபாத் 500044 மின்னஞ்சல் முகவரி: prakulthadi@hotmail.com cirp.shebamarine@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் கடைசி தேதி	ஜனவரி 16, 2025 (அதாவது, NCLT இணையதளத்தில் உத்தரவு பதிவேற்றப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள்)

IA(IBC)(LIQ)/35/CHE/2024 in CP(IB)/61/CHE/2023.-ன்படி **ஷீபா மரைன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்டில்** கலைப்பு நடைமுறையை டிசம்பர் 13, 2024 (டிசம்பர் 17, 2024 அன்று NCLT இணையதளத்தில் உத்தரவு நகல் பதிவேற்றப்பட்டது)அன்று துவங்க தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நீதிமன்றம்-I உத்தரவிட்டுள்ளது.

ஷீபா மரைன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்டின் பங்குதாரர்கள் வரிசை எண். 10க்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள கலைப்பலுவலரின் முகவரிக்கு தங்கள் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் ஜனவரி 16, 2025 (அதாவது, NCLT இணையதளத்தில் உத்தரவு பதிவேற்றப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள்) அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் மின்னணு ஆதாரங்களின் மூலம் மட்டுமே தங்களின் உரிமை கோரல்களை சமர்ப்பிக்க வேண்டும். இதர கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது உரிமை கோரல்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

தவறான சான்றுகளை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

கலைப்புச் செயல்பாட்டின் போது ஒரு பங்குதாரர் தனது உரிமைகோரல்களைச் சமர்ப்பிக்கவில்லை என்றால், இந்திய நொடித்தல் மற்றும் திவால்நிலை வாரியத்தின் (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலைத் தீர்வு செயல்முறை) ஒழுங்குமுறைகள், 2016-ன் கீழ் காப்பரேட் திவால்நிலைத் தீர்மான செயல்முறையின் போது அத்தகைய பங்குதாரர் சமர்ப்பித்த உரிமைகோரல்கள் பிரிவு 38ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படும்.

ஒப்பம்/-
பிரகுல் தாடி
தேதி: டிசம்பர் 20, 2024
இடம்: ஹைதராபாத்
ஷீபா மரைன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்டின் கலைப்பு அலுவலர்
Reg. No.: IBBI/IPA-002/IP-N01149/2021-2022/13806

SHRIRAM Finance

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)

பொது அறிவிப்பு

இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது **நாமக்கல் கிளை,** முதல் தளம், 78/1, சிஎஸ்எம் காம்ப்ளக்ஸ், சேலம் பிரதான சாலை, நாமக்கல், தமிழ்நாடு – 637 001 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், எண்.818/137D5B, சிபிடி வேலு காம்ப்ளக்ஸ், முருகன் கோவில் பஸ் ஸ்டாப், சேலம் சாலை, நாமக்கல், தமிழ்நாடு – 637 001 என்ற முகவரிக்கு 27 மார்ச் 2025 முதல் மாற்றப் படுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிராந்திய வர்த்தக தலைவர்

SHRIRAM Finance

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)

பொது அறிவிப்பு

இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது **வடலூர் - I கிளை,** முதல் தளம், 2/5, ஓம்சக்தி, பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு – 607 104 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், எண்.55/2, தனவேலு காம்ப்ளக்ஸ், நெய்வேலி பிரதான சாலை, வடலூர், கடலூர், தமிழ்நாடு – 607 303 என்ற முகவரிக்கு 27 மார்ச் 2025 முதல் மாற்றப் படுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிராந்திய வர்த்தக தலைவர்

SHRIRAM Finance

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)

பொது அறிவிப்பு

இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது **திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் பிராந்திய அலுவலகம்** முதல் தளம், எண்.52A, வடக்கு தேரடித் தெரு, திருவாரூர், தமிழ்நாடு – 611001 என்ற முகவரியிலிருந்து எல்.ஆர்.ஜெ. காம்ப்ளக்ஸ், எண்.12/1860, இரண்டாவது தளம், மிலிட்டரி கேண்டீன் எதிரில், நடுவர் கிழக்குத் தெரு, நாகப்பட்டினம், தமிழ்நாடு – 611001 என்ற முகவரிக்கு 28 மார்ச் 2025 முதல் மாற்றப் படுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிராந்திய வர்த்தக தலைவர்

மேன்மைமிகு சார் ஆட்சியர் நீதிமன்றம், திண்டிவனம்
சி.ப.அ 4/172/ 2024
நாள் :15.11.2024

C.ஆரோக்கியசாமி, S/o.சின்னப்பன் சிறுணாம்பூண்டி கிராமம், கோணைpost, செஞ்சி T.K., விழுப்புரம் மாவட்டம்

மனுதாரர் தெரிவிக்கும் பொது அறிவிப்பு

C.ஆரேக்கியசாமி த/பெ சின்னப்பன் என்ற நான், எனது தந்தை சின்னப்பன்என்பவர் கடந்த 18/07/2012 அன்று செஞ்சி தாலுகா போத்துவாய் கிராமத்தில் இறந்ததை விபரம் தெரியாத காரணத்தால் இறப்பு பதிவு செய்யாமல் விடுபட்டுவிட்டது, தற்பொழுது அவரது இறப்பு சான்று தேவைப்படுவதால் இறப்பு சான்று வேண்டிமேற்படி திண்டிவனம் சார் ஆட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் எழுத்து மூலமோ நேரிலோ ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் இம்மனுவின் எவருக்கும் ஆட்சேபனை இல்லை என ஒருதலைபட்சமாக ஏற்கப்பட்டு உத்தரவு ஆகிவிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.

C.ஆரோக்கியசாமி,
மனுதாரர்

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 30 **டிசம்பர், 2024** அன்று மாலை 03:00 **மணிக்கு** கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

வ. எண்.	கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/கணவன் பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
1	சென்னை	104142510638	C V வர்மா	S/o. வீரக்குமார்	எண்.7 2 காளிங்கராயன் 2வது லேன், செமெட்ரி ரோடு எதிரில், வண்ணாரப் பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600021	17-05-2024	85342.64
2	சென்னை	104142511016	சாந்தி தெய்வசிகாமணி	S/o. தெய்வசிகாமணி	12/6, அண்ணா தெரு, பாரதியார் நகர், விருகும்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600092	16-08-2024	201404.71
3	சென்னை	104142511017	ராஜேஷ் தெய்வசிகாமணி	S/o. தெய்வசிகாமணி	12/6, அண்ணா தெரு, பாரதியார் நகர், விருகும்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600092	16-08-2024	192333.40
4	சென்னை	104142511018	வருணா S	S/o. சண்முகம்	10 ஏ, துரைசாமி நகர், பொன்னேரி, தடப்பெரும்பாக்கம், திருவள்ளூர், தமிழ்நாடு 601204	16-08-2024	124546.95
5	சென்னை	104142511019	பாலகிருஷ்ணன் M	S/o. மாசிலாமணி	எண்.15/7, 14வது தெரு, டான்சி நகர், வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600042	16-08-2024	198272.95

ஏல தேதி 30 டிசம்பர், 2024 அன்று மாலை 03.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

HDFC BANK We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பாரேல் (மேற்கு), மும்பை 400 013 மற்றும் அதன் அலுவலகம் ஒன்று உள்ளது

ரீடெய்ல் போர்ட்போலியோ மானேஜ்மெண்ட், ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட், 1வது தளம், ஐ–திங்க் டெக்னோ வளாகம், கஞ்சூர்மார்க் (கிழக்கு), மும்பை 400042.

ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் விற்பனை அறிவிப்பு மற்றும் பொது அறிவிப்பு

பத்திரங்களுக்கு எதிரான கடன்/ஓவர் டிராப்ட்டின் தன்மையில் கடன் வசதிகளைப் பெறுவதற்காக, வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்பனை செய்வது குறித்து ஹெச்டிஎப்சி வங்கி லிமிடெட்டின் ("வங்கி") கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் விதிமுறைகளின்படி நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்துவதில் கடன்தாரர்கள் தொடர்ந்து தவறியதன் காரணமாக, கீழேயுள்ள கடன் கணக்குகள் என்பிஏ-வாக (நிறைவேற்றப்படாத ஆஸ்திகள்) மாற்றப்பட்டுள்ளது. இந்த கடன்தாரர்களுக்கு வங்கி கீழே குறிப்பிடப்பட்ட தேதியில் இறுதி விற்பனை அறிவிப்பு உட்பட பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது, வங்கி உறுதிமொழியை செயல்படுத்தி, கடன்தாருக்கு கீழே உள்ள கணக்குகளில் உள்ள நிலுவைத் தொகையை முழுவதுமாக திருப்பிச் செலுத்த 7 நாட்கள் அவகாசம் வழங்கி உள்ளது, தவறினால், இது தொடர்பாக மேலும் அறிவிப்பை வெளியிடாமல், அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்க வங்கிக்கு கதத்திரம் உள்ளது.

கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையை புறக்கணித்ததனர் மற்றும் செலுத்தத் தவறி விட்டனர், எனவே, கடன் ஒப்பந்தத்தின் கீழ் வங்கி அதன் உரிமைகளைப் பயன்படுத்துவதன் மூலம், 26 **டிசம்பர்,** 2024 அன்று அல்லது அதற்குப் பிறகு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக பத்திரங்களை விற்க/ அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளது. எந்த நேரத்திலும், பங்குச் சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் காரணமாக, அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்தால், மார்ஜின் தேவையில் மேலும் குறைபாட்டை உருவாக்கினால் பின்னர் வங்கி அதன் விருப்பத்தின் பேரில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை ஒரு (1) காலண்டர் நாளுக்குள், இது தொடர்பாக எந்த அறிவிப்பும் இல்லாமல் விற்கும் என்று கடன்தாரர்களுக்கு மேலும் அறிவிக்கப்படுகிறது. அடமான பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை சரிசெய்த பிறகும் மீதமுள்ள நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்த கடன்தாரர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன்தாரர் பெயர்	17 டிசம்பர், 2024 அன்று செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை (ரூபாயில்)	விற்பனை அறிவிப்பு தேதி
1	XXXX0120	உண்ணாமலை எஸ்.எம்	20,331.78	18 டிசம்பர் 2024
2	XXXX0439	வி ரங்கநாதன்	135.93	18 டிசம்பர் 2024
3	XXXX5931	எம் புஷ்பா	9,98,684.81	18 டிசம்பர் 2024
4	XXXX8806	ஆர் ரங்கசாமி	18,22,803.07	18 டிசம்பர் 2024
5	XXXX9173	ஷீலா துவாரக நாத்	7,50,224.69	18 டிசம்பர் 2024
6	XXXX1408	அஜய் ஜெயின்	4,51,066.54	18 டிசம்பர் 2024
7	XXXX0376	வி கணேஷ்	3,14,449.00	18 டிசம்பர் 2024
8	XXXX7976	எம் பட்டத்தரசி	3,25,205.44	18 டிசம்பர் 2024
9	XXXX1902	சி லலிதா	4,47,136.00	18 டிசம்பர் 2024
10	XXXX3175	காயத்ரி ஆர்	2,66,817.66	18 டிசம்பர் 2024
11	XXXX7470	டி மிலாப்சந்த் கடோட்	3,41,890.74	18 டிசம்பர் 2024
12	XXXX1874	இஸ்ரேல் விவேக் பிரசாத் ஏ	13,957.71	18 டிசம்பர் 2024
13	XXXX4533	ரோகினி அஜய் பதக்	5,24,133.00	18 டிசம்பர் 2024
14	XXXX0510	கே ராயப்பன்	67,211.79	18 டிசம்பர் 2024
15	XXXX6876	ஜே வைசாலி	2,22,113.60	18 டிசம்பர் 2024
16	XXXX9175	கே விக்னேஷ்	64,932.60	18 டிசம்பர் 2024
17	XXXX6900	கரிஷ்மா சுனில் குப்தா	4,34,136.68	18 டிசம்பர் 2024
18	XXXX1868	சுசித்ரா பிரசாந்த் துசானே	1,33,103.00	18 டிசம்பர் 2024
19	XXXX5200	மதன் குமார்	86,066.77	18 டிசம்பர் 2024
20	XXXX5804	டாக்டர் என் தங்கராஜூ	1,26,448.59	18 டிசம்பர் 2024
21	XXXX8400	வினோத் கருணாகரன்	13,938.12	18 டிசம்பர் 2024
22	XXXX8125	எஸ் கார்த்திகேயன்	20,150.07	18 டிசம்பர் 2024
23	XXXX4502	மாளவிகா ஜெயராம்	3,84,685.48	18 டிசம்பர் 2024
24	XXXX8856	சாக்ஷி மேத்தா ஒய்	2,14,625.79	18 டிசம்பர் 2024
25	XXXX6361	கே எஸ் ஷெட்டி	10,11,895.08	18 டிசம்பர் 2024
26	XXXX3301	வி செந்தில்நாதன்	8,96,879.83	18 டிசம்பர் 2024
27	XXXX8772	அரிஜீத் சௌத்ரி	4,58,109.80	18 டிசம்பர் 2024
28	XXXX0078	சுந்தரம்செட்டியார் ரங்கநாதம் கந்தசாமி	20,472.50	18 டிசம்பர் 2024
29	XXXX7271	எம் விஜயலட்சுமி	31,662.00	18 டிசம்பர் 2024
30	XXXX9811	கார்த்திக் பாபு எஸ் வி	7,89,221.82	18 டிசம்பர் 2024
31	XXXX9712	அறிவுசுடர், க/பெ. பாலகிருஷ்ணன்	4,04,055.82	18 டிசம்பர் 2024
32	XXXX3997	எஸ் சோபனா	4,92,679.82	18 டிசம்பர் 2024
33	XXXX8648	ரவிச்சந்திரன் பி	5,98,083.82	18 டிசம்பர் 2024
34	XXXX9673	ஹேயா சாவ்டா	9,07,806.82	18 டிசம்பர் 2024
35	XXXX4597	பாலமுருகன் ஆறுமுகம்	2,74,643.82	17 டிசம்பர் 2024

நாள் : 20.12.2024
இடம் : தமிழ்நாடு
ஒப்பம்/-
ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்

பெயர் மாற்றம்

RITHISHKUMAAR, த/பெ. Parthiban, பிறந்த தேதி : 15.12.2006, எண்.242/2, ஜவஹர்லால் நேரு தெரு, பாலமுருகன் நகர், டி.வி. புரம், பொன்